**மாகாணக் கல்வித் திணைக்களம் - 2017**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை**
# இஸ்லாம்

**தரம் - 11** **நேரம் : 3 மணித்தியாலம்**

**பெற்ற புள்ளிகள் : ..........**

## பகுதி – I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01.) பனூ இஸ்ரவேலர்கள் எழுபத்தொரு பிரிவுகளாகப் பிரிந்தனர். எனது சமுதாயம் பிரிவுகளாகப் பிரிந்துவிடுவார்.

(1) எழுபது (2) எழுபத்து மூன்று
(3) எழுபத்து ஐந்து (4) எழுபத்து இரண்டு

02.) மு.ஃ.தஸிலா சிந்தனைக்கு எதிராகப் போராடிய இமாம்

(1) இமாம் அஷ்மத் (2) இமாம் அபுல் ஷசன்
(3) இமாம் அபூ ஷனீபா (4) இமாம் ஷாபி

03.) மதம் மாறியவர் இவ்வாறு அழைக்கப்படுவார்.

(1) முர்தத் (2) காபிர் (3) முஷ்ரிக் (4) முஸ்லிம்

04.) போலி நபியான முஸைலமா கொல்லப்பட்டது

(1) பைரூஸ் தைலமி என்ற ஸஹாபியினால் ஆகும்.
(2) வஷ்ஷி பின் ஷர்ப் என்ற ஸஹாபியினால் ஆகும்.
(3) காலித் பின் வலீதின் படையால் ஆகும்.
(4) நகர்வான் யுத்தத்திலாகும்.

05.) "கழா – கத்ர்" என்பதன் மொழி ரீதியான கருத்து

(1) படைத்தல், நிர்ணயித்தல்
(2) காத்தல், மட்டிடுதல்
(3) முன்னேற்பாடு, நிறைவேற்றல்
(4) நம்பிக்கை, பேராற்றல்

06.) "அல்லாஷ் அறியாத நிலையில் ஓர் இலைகூட விழுவதில்லை" என்பது

(1) அல் - குர் ஆனின் கூற்றாகும்.
(2) அல் ஹதீஸின் கூற்றாகும்.
(3) ஒரு சஹாபியின் கூற்றாகும்.
(4) இமாம் மாலிக் (றஹ்) கூற்றாகும்.

07.) ஸக்காத் பெறத் தகுதியான எட்டுக் கூட்டத்தில் பக்கீர் என்பது

(1) பரம ஏழை (2) புதிதாக இஸ்லாத்தை தழுவியோர்
(3) அடிமைகள் (4) முஸ்லிம் அல்லாதவர்கள்

kalvi.lk

08.) ''ஸவ்ம்'' என்பதன் மொழிக் கருத்து

(1) தவிர்ந்து கொள்ளல் (2) சுட்டெரித்தல்
(3) நோன்பு நோற்றல் (4) பசித்திருத்தல்

09.) ''ஹஜ்ஜின் அர்க்கான்கள்'' என்பது

(1) ஹஜ்ஜின் வாஜிபுகள்

(2) ஹஜ்ஜின் பர்ளுகள்

(3) ஹஜ்ஜின் ஸீன்னத்துக்கள்

(4) ஹஜ்ஜின் போது விலக்கப்பட்டவைகள்

10.) ஹஜ்ஜின் முஹர்ராமாத்களில் ஒன்று

(1) தலைமுடி களைதல் (2) ஸஈ செய்தல்
(3) தல்பியா ஓதுவது (4) வேட்டையாடுவது

11.) இஸ்லாத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறும் புனிதஸ்தலங்களில் ஒன்று

(1) க.:.பதுவ்வாஹ் (2) எகிப்து நூதனசாலை
(3) சித்ரதுல் முன்தஹா (4) கெய்ரோ பள்ளிவாசல்

12.) ஒழுக்கம், நற்பண்பு என்பதன் அரபு மொழிப்பதம் முறையே

(1) ஆதாப், அ.:.லாக் (2) இபாதத் அகாயித்
(3) இராததுன், குத்ரதுன் (4) அஸ்ஸவ்ம்

13.) ''மல்யுத்தத்தில் வெற்றி பெறுபவன் உண்மையான வீரனல்லன். கோபத்தின் போது தன்னை அடக்கிக் கொள்பவனே உண்மையான வீரனாவான்.'' இது

(1) அல் குர் ஆனின் கூற்று (2) அல் ஹதீஸின் கூற்று
(3) ஒரு சஹாபியின் கூற்று (4) இமாம் அபூஷனீபாவின் கூற்று

14.) கருங்கற் பாறையிலிருந்து ஒட்டகம் வெளியாகிய அற்புதத்தைப் பெற்ற நபி
(1) மூஸா நபி (2) ஈஸா நபி
(3) ஸாலிஹ் நபி (4) முஹம்மது நபி

15.) ''எவர் ( அல்லாஹ்வுடைய) தூதருக்கு (முற்றிலும்) கட்டுப்பட்டு நடக்கிறாரோ அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிபட்டவராவார்'' என்பது

(1) அல்குர்ஆனின் கூற்றாகும். (2) அல்ஹதீஸின் கூற்றாகும்.
(3) இமாம் நவவியின் கூற்றாகும். (4) ஒரு இமாமின் கூற்றாகும்.

16.) 16 -20 வரையிலான வினாக்களுக்கு சரியான விடைகளை கோடிடுக.

இமாம் புகாரி ஹிஜ்ரி (16) …………………….…… ஆண்டு புஹாராவில் பிறந்தார்கள். இவரின் இயற்பெயர் (17) ………………………….ஆகும். இவரின் தந்தை பெயர் (18) ………………..….. ஆகும். இவரின் ஹதீஸ் தொகுப்பான ஸஹீஹ் புஹாரி (19) …………………………….…….. ஹதீஸ்களை உள்ளடக்கியுள்ளது. இவர் ஹிஜ்ரி (20) ………………….. இல் மறைந்தார்கள்.

16.) (1) 209 (2) 204 (3) 194 (4) 2015

17.) (1) முஹம்மத் (2) ஸுலைமான் (3) அஹ்மத் (4) முஸ்லிம்

18.) (1) ஈஸா (2) ஹஜ்ஜாஜ் (3) சுஜப் (4)இஸ்மாஈல்

19.) (1) 7275 (2) 4800 (3) 4000 (4) 4341

20.) (1) 256 (2) 279 (3) 273 (4) 303

21.) ஸிஹாகுஸ் ஸித்தா என அழைக்கப்படும் கிரந்தங்கள்

(1) ஏழு (2) ஆறு (3) நான்கு (4) மூன்று

22.) காலத்துக்குக் காலம் தோன்றும் தோன்றக் கூடிய சட்ட சிக்கல்களை தீர்த்துவைக்க பின்பற்றப்படும் மூலாதாரம்

(1) அல்குர் ஆன் (2) இஜ்திஹாத்
(3) அல் ஹதீஸ் (4) ஸகாபிகளின் கூற்று

23.) இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய கலைகளுள் முதன்மையானது

(1) இசைக் கலை (2) பிக்ஹுக் கலை
(3) மருத்துவக் கலை (4) கட்டிடக் கலை

24.) ''பிக்ஹுத் துறையின் பொற்காலம்'' என போற்றப்படுவது

(1) முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலம்.
(2) ஸாகாபாக்களின் காலம்
(3) தாபியீன்களின் காலம்
(4) தபஉத்தாபியீன்கள் காலம்

25.) ஹிஜ்ரி 11ம் ஆண்டு இஸ்லாமிய அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்ற கலீபா

(1) கலீபா உமர் (றழி) (2) கலீபா அபூபாக்கர் (றழி)
(3) கலீபா அலி (றழி) (4) கலீபா உஸ்மான் (றழி)

26.) ''அப்துல்லாஹ் இப்னு அபீ குஷாபா'' என்னும் இயற்பெயர் கொண்ட ஸஹாபி

(1) அபூபக்கர் (றழி) (2) அபீ வக்காஸ் (றழி)
(3) உஸ்மான் (றழி) (4) தல்ஹா (றழி)

27.) கலீபா உமர் (றழி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியது

(1) நுபுவ்வத் 5ம் ஆண்டு (2) நுபுவ்வத் 6ம் ஆண்டு
(3) நுபுவ்வத் 10ம் ஆண்டு (4) ஹிஜ்ரி 11ம் ஆண்டு

28.) அபூலுஃலுஆ எனும் பாரசீக மஜூஸியின் தாக்குதலால் வபாத்தான ஸஹாபி

(1) அபூபக்கர் (றழி) (2) உமர் (றழி)
(3) உஸ்மான் (றழி) (4) அலி (றழி)

29.) நபி (ஸல்) அவர்கள் நுபுவ்வத் பெறும்போது கலீபா அலி (றழி) அவர்களின் வயது

(1) 10 வயது (2) 20 வயது
(3) 40 வயது (4) 60 வயது

kalvi.lk

30.) ‘‘அல்லாஹ்வின் சிங்கம்’’ என புகழப்பட்ட கலீபா யார்?

(1) அபூபக்கர் (றழி) (2) அலி (றழி) (3) யசீத் (றழி) (4) முஆத் (றழி)

31.) கி. பி. 628ல் நபி (ஸல்) அவர்களால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஸஹாபி

(1) முஆத் இப்னு ஜபால் (2) வஹப் இப்னு அபீ ஹப்ஸா
(3) அம்ரிப்னுல் ஆஸ் (4) அப்துல்லாஹ் இப்னு உமர்

32.) ‘‘கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிவது மாத்திரம் அல்ல; மனவிரிவுக்கும், தெளிவுக்கும் துணைநிற்பதாகும். குர்ஆனில் உள்ள போதனைகளை விளக்கி அவற்றைப் பின்பற்றி நடப்பதே அவசியமானது. இதனைப் புரிந்து கொள்ளாதவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டவர்களாவர்’’ என்பது

(1) M. C. சித்திலெப்பையின் கூற்றாகும்.
(2) T. B. ஜாயாவின் கூற்றாகும்.
(3) ஜமாலுத்தீன் ஆப்காணியின் கூற்றாகும்.
(4) அரபி பாஷாவின் கூற்றாகும்.

33.) இஸ்லாமிய நிதியியல் கோட்பாடுகளுள் ‘‘ஸலம்’’ என்பது
(1) விவசாயக் கடன் (2) உற்பத்திக் கடன்
(3) வாடகைக் கொள்வனவு (4) அடகு

34.) இஸ்லாத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குதாரர்கள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு வியாபாரம்

(1) அல் முறாபஹா (2) அல் முழாறபா (3) அல் முஷாரகா (4) இஜாறா

35.) நிகாஹ் செல்லுபடியாவதற்கான பர்ளுகள்

(1) 04 (2) 05 (3) 03 (4) 06

36.) இஸ்லாமிய திருமணத்தில் ‘‘ஈஜாப்’’ என்பது

(1) ஏற்றுக்கொள்ளல் (2) ஒப்படைத்தல்
(3) சாட்சிகள் (4) மஹர்

37.) மனைவி கணவனிடமிருந்து விவாக விடுதலை கோரிப் பெறுவது

(1) பஸ்கு (2) தலாக் (3) குல்உ (4) ரஜா

38.) திருமணத்தின் பின் வலீமா கொடுப்பது

(1) ஸுன்னா முஅக்கதா (2) பர்ளு
(3) வாஜிப் (4) மக்ரூஹ்

39.) கஃபாவை முதன்முதலாகக் கட்டிய நபி

(1) இப்றாகிம் நபி (2) இஸ்மாயில் நபி
(3) ஆதம் நபி (4) முஹம்மது நபி

40.) மக்கா வெற்றி கொள்ளப்பட்டது

(1) ஹிஜ்ரி 8 (2) ஹிஜ்ரி 2 (3) ஹிஜ்ரி 3 (4) ஹிஜ்ரி 7

(40 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

# பகுதி – II

## வினாக்கள்

**முதலாம் இரண்டாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தமாக ஆறு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**01.) சுருக்கமான விடை தருக.**

(1) முஸ்லீம் உம்மத் எனும் கட்டமைப்பைப் பாதுகாப்பதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(2) ஊடகங்கள் பின்பற்ற வேண்டியப் ண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

(3) இத்தாவின் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(4) குடும்ப உறவு தொடர்பான அல்குர்ஆன் வசனம் ஒன்றையும், ஹதீஸ் ஒன்றையும் குறிப்பிடுக.

(5) இஸ்லாம் தடைசெய்துள்ள உழைப்பு முறைகள் நான்கைக் குறிப்பிடுக.

06.) கலாநிதி ஜாயா ஸாஹிராக் கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

07.) இலங்கையில் சுதந்திரத்திற்காகப் போராடிய குழுவில் முக்கிய பங்காற்றிய முஸ்லீம் தலைவர்கள் இரண்டு பெயரைக் குறிப்பிடுக.

08.) கலீபா அலி றழியல்லாஹு அன்ஹு அவர்களின் கொலையின் பின்னணியில் காணப்பட்ட சிந்தனைப் பிரிவினரைப் பெயரிடுக.

09.) உமர் றழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆளுமைப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

10.) அபூபக்கர் ரழிறல்லாஹு அன்ஹு அவர்கள் கிலாபத்துக்காற்றிய பங்களிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**02.)** (1) மூன்றாம் தவணையில் நீங்கள் மேற்கொண்ட கணிப்பீடு ஒன்று தருக.

(2) கணிப்பீட்டை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கும் நன்மை தீமைகள் மூன்றினை எழுதுக.

(3) கணிப்பீடு ஒன்றை செய்வதற்காக நீங்கள் தகவல் பெற்றுக் கொண்ட வழிகள் 3 தருக?

(10 புள்ளிகள்)

Education கல்வி

**03.)** (1) கலீபா உஸ்மான் றழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் துன்னூறைன் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?

(2) முஜ்தஹித்கள் பெற்றிருக்க வேண்டிய தகைமைகள் மூன்றைக் குறிப்பிடுக.

(3) ஸீன்னாவைப் பாதுகாப்பதற்காக நபி ஸல்லல்லாஹுு அலைஹீ வஸல்லம் அவர்கள் மேற்கொண்ட மூன்று நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**04.)** (1) இஸ்லாத்தின் சட்ட மூலாதாரங்கள் எவை?

(2) நபிமார்களால் காண்பிக்கப்பட்ட அற்புதங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

(3) பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

- ❖ தவக்குல்
- ❖ ஸப்ர்
- ❖ ரிழா
- ❖ ம.்.ரிபா

(10 புள்ளிகள்)

**05.)** (1) நபி ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லம் அவர்களிடம் காணப்பட்ட பணிவு என்னும் பண்பை எடுத்துக்காட்டும் சம்பவம் ஒன்றைத் தருக.

(2) ஒழுக்கத்தை வலியுறுத்தும் இரண்டு ஹதுஃஸ்களைக் குறிப்பிடுக.

(3) பின்வரும் சொற்களை விளக்குக.

- ❖ இஹ்ராம்
- ❖ மீக்காத்

(10 புள்ளிகள்)

**06.)** (1) ஹஜ்ஜுுக்கும் உம்ராவுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

(2) நோன்பின் சிறப்பைக் காட்டும் இரு ஹதீஸ்களைக் குறிப்பிடுக.

(3) ஸக்காத்தைக் கூட்டாக நிறைவேற்றுவதால் கிட்டும் பயன்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

**07.)** (1) நோன்பினால் கிட்டும் லௌகீகப் பயன்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(2) வரலாற்றில் தோன்றிய போலி நபிமார்களில் மூவரைக் குறிப்பிடுக.

(3) “முர்தத்” என்றால் யார்? தௌபா செய்து மீளாத பட்சத்தில் அவர் எவ்வாறு நடத்தப்படுவார்?

(10 புள்ளிகள்)

**08.)** (1) ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(2) அல்லாஹ்வை இவ்வுலகின் படைப்பாளன் என்ற கருத்தைச் சுட்டும் இரு அல்குர்ஆன் வசனங்களைக் குறிப்பிடுக.

(3) பின்வருவன தொடர்பாக சிறு விளக்கம் ஒன்றைத் தருக.

- ❖ மலக்குகள்
- ❖ முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம்
- ❖ பாவம்
- ❖ வலிமார்கள்

(10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page